# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## இரண்டாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**
**C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழர்கள் வீடுகளில் திண்ணையின்அடையாளம் என்ன?
2. கோட்டை முற்றுகைக்கு அணியும் பூ எது?
3. இலையின் பல பருவங்களைச் சுட்டும் சொற்கள் யாவை?
4. உறையூரை 'ஓர்தொவுர' எனக் குறிப்பிடுவர் யார்?
5. புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்ட ஆண்டு எது?
6. தமிழ்நாட்டின் பண்பாட்டையும் வரலாற்றையும் காட்டும் சான்றுகள் எவை?
7. பாலை நிலத்தவர் உடுத்திய ஆடை எது?
8. அம்பா ஆடல் என்றால் என்ன?
9. காணாமலே கொண்ட நட்பு பற்றிக் கூறும் நூல் எது?
10. மணிமேகலை பத்தினிப் பெண்களை எவ்வாறு கூறுகிறது?
11. பவுத்தப் பண்பாட்டைச் சுருக்கமாகக் கூறும் திருக்குறள் யாது?
12. பாளையப்பட்டு ஆட்சி முறைக்கு வலுவூட்டியவர் யார்?
13. குமரகுருபரர் இயற்றிய நூல்கள் இரண்டனைக் குறிப்பிடுக.
14. பொது உடைமைக் கொள்கை தமிழகத்தில் எவ்வாறு வேரூன்றியது?
15. 'கல்லில் எழுத்துக்கு நேர்' எனப் பாடியவர் யார் ?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தமிழர்கள் பின்பற்றும் அக உணர்வுகள் வெளிப்படுத்தும் புறப்பண்பாடு பற்றிக் குறிப்பிடுக?
2. தமிழரின் முற்கால நிலம் சார்ந்த வாழ்வு பற்றி விளக்குக.
3. தமிழரின் பண்பாட்டை விளக்கும் மூலங்களில் அயலகப் பயணிகளின் பதிவுகள் யாவை?
4. தமிழரின் பரந்து பட்ட மனமும் பண்பாடும் குறித்து விளக்குக.
5. தமிழர் தம் காதல் பண்பாடு பற்றிக் கூறுக.
6. புறநானூறு காட்டும் பண்பாட்டு நிகழ்வுகள் இரண்டனைக் கூறுக.
7. மணிமேகலை கூறும் பண்பாட்டு நெறிகள் யாவை?
8. அப்பரும் அப்பூதி அடிகளும் வழங்கிய பண்பாடு குறித்து எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக (3x15=45)**

1. (அ) தமிழர் பண்பாட்டில் மாற்றங்கள் ஏற்படக் காரணங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) தமிழர் பண்பாட்டு மூலங்களையும் மையங்களையும் பற்றி விவரிக்க.

2. (அ) தமிழரின் பண்பாட்டுஅடிப்படைகள் யாவை?.

(அல்லது)

(ஆ) திருக்குறள் போற்றும் அறவாழ்வு பற்றி விளக்குக.

3. (அ) வைணவம் வளர்த்த பண்பாடு குறித்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் விடுதலை இயக்கம் குறித்து எழுதுக.

* * *